# TAMIL

**Spiritual Communion prayer**

ஆசை (ஆன்ம) நன்மை ஜெபம்

என் இயேசுவே! தேவரீர் மெய்யாகவே நற்கருணையில் இருக்கிறீரென்று நான் விசுவாசிக்கிறேன்.
எல்லாவற்றுக்கும் மேலாக உன்னை நான் நேசிக்கிறேன். என் ஆத்துமத்திலே உம்மைக் கொண்டிருக்க நான் மிகவும் ஆசிக்கிறேன்.
இப்பொழுது நான் தேவதிரவிய அனுமானத்தின் வழியாக உம்மை உட்கொள்ள முடியாமலிருப்பதால், என் ஆண்டவரே! ஞான விதமாய் என் இருதயத்தில் எழுந்தருளி வாரும்.
ஆண்டவரே! நீர் என்னுள்ளத்தில் வந்திருக்கிறீர் என்று நான் நம்புகிறேன்.
என்னை முழுவதும் உம்முடன் ஒன்றிக்கிறேன்.
என்னை உம்மை விட்டு ஒருபோதும் பிரிய விடாதேயும் இயேசுவே! ஆமென்.

**Diocesan Prayer**

குணம் அடைவதற்காகவும் வழி நடத்தப்படுவதாகவும் இயேசு கிறிஸ்துவிடம் மன்றாட்டு

இயேசுவே, இறைமகனே, எங்கள் பலவீனங்களைத் தாங்குவதற்காக இறைவனால் அனுப்பப்பட்டீரே, உலகில் நிலவி வரும் இந்த இக்கட்டான நேரங்களில் எங்களோடு இருந்தருளும்.,

இரக்கமுள்ள மீட்பரே, பிணியுற்றவர்கள் உடல் நலம் பெற்று உம்மை மகிமைப்படுத்த, அவர்களுக்கு பூரண  குணம் அளித்து ஆறுதல் தந்தருளும்.

தெய்வீக மருத்துவரே, எங்களை கவனித்துக் கொள்பவர்கள், பொறுமையோடு குணப்படுத்தும்படி, நீர் அவர்களுடன் துணையாய் இருந்தருளும்.

என்றும் உள்ள ஞானமே, எங்களுடைய தலைவர்கள் உம்முடைய ஒளியை பின்பற்றி நல்ல தீர்வுகளை தேடவும், அவர்களை வழி நடத்தியருளும்.

கிறிஸ்துவே, திருப்பொழிவு செய்யப்பட்டவரே, நாங்கள் தீமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, துன்பங்களிலிருந்து காப்பாற்றப் பட, எங்கள் உடலையும் ஆவியையும் பாதுகாத்தருளும்.

தந்தையாகிய இறைவனோடு, தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து, ஆட்சி செய்கின்ற உம்மை மன்றாடுகின்றோம்.

ஆமென்